[2nd November 1962

இலங்கைவாழ் தமிழர்கள்

*1090 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையில் வசிக்கும் தமிழர்களின் பிரஜா உரிமை விஷயமாகவும், திருப்பி அனுப்பப்படும் தமிழர்களின் புனர்வாழ்வு பற்றியும் இந்த அரசாங்கத்தினை மத்திய அரசாங்கம் கலந்து ஆலோசித்ததா ?

(இ) அப்படியெனின், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The question of acquisition of Ceylon Citizenship by persons of Indian origin resident in Ceylon is governed by Ceylon laws. The State Government is generally in touch with the Central Government in regard to various aspects of the problem of such persons to the extent that India is concerned.

The State Government have provided various facilities to help those who have been expelled from Ceylon.

(*b*) A statement [a] showing the relief and rehabilitation measures sanctioned by the State Government on the recommendations of the Special Officer and the Proposals of the Planning Commission is placed on the Table of the House.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுடைய பிரஜா உரிமைப் பிரச்னை பல காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இந்தப் பிரஜா உரிமைப் பிரச்னையை மத்திய அரசாங்கம் தக்க கவனத்துடன் தீர்க்கவில்லை என்பதை மாநில அரசாங்கம் மேலும் வலியுறுத்துமா ? அப்படி வலியுறுத்தி இலங்கையில் இருக்கிறவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் பிரஜா உரிமை கிடைப்பதற்கு ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மத்திய அரசாங்கத்தை கண்டனம் செய்ய வேண்டுமென்று இருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கம் அவ்வாறு கருதவில்லை. இது மிகவும் சிக்கலான ஒரு பிரச்னை. மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையில் போதிய கவனம் செலுத்தி சுமுகமாக இதைத் தீர்ப்பதிலேதான் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலிருந்து இலங்கையிலிருந்து நாடு திரும்பியவர்களின் குழந்தைகளுக்கு, பள்ளிகளிலும், காலேஜுகளிலும் படிக்கிறவர்களுக்கு ஆகும் போர்டிங், லாட்ஜிங் செலவை அரசாங்கம் எற்றுக்கொள்ளும் என்று தெரியவருகிறது. ஆனால் ஒரு குழந்தையாவது இந்த போர்டிங், லாட்ஜிங் சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிற நிலைமை அரசாங்கத்தின்

---

[a] Printed as Appendix II on pages 516–518.

கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதற்குக் காரணம் யாருக்கு விண்ணப்பிக்கவேண்டும், அந்தச் சலுகையை எவ்வாறு பெறுவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தெந்தச் சலுகைகளை அரசாங்கம் அளிக்கவேண்டுமென்று கருதுகிறதோ, அந்தச் சலுகைகள் கிடைக்காமல் இருந்தால், குறிப்பாக கனம் அங்கத்தினர்கள் எனக்கு எழுதி அனுப்பினால், அந்தச் சலுகைக்கு உரியவர்கள் அதைப் பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். மாதவன்: இலங்கையிலிருந்து விரட்டியடிக்கப் பட்டவர்களுக்கு தென்னை பயிரிடுவதற்காக நிலம் வழங்கும் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமலில் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தத் திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் அமலில் இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மத்திய அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது, எந்த அளவுக்கு நன்மை பெற்றுத் தந்திருக்கிறது என்பதைப் பற்றி இந்த அரசாங்கத்துக்கு தகவல் வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பொதுவான கேள்வி. மத்திய அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அப்போதைக்கப்போது இந்த அரசாங்கத்தையும் கலக்கிறது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கலக்கிறது. குறிப்பாக இதற்கு நான் விடையளிப்பதற்கு இல்லை.

சாலைகள் பராமரிப்பு

*1091 கேள்வி.—**திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் இடது கரையில் அணைக்கரையிலிருந்து கிழக்கே கடற்கரைவரை கப்பி போட்டு சாலை அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) எப்போது நிறைவேற்றப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. கோ. சி. மணி: கொள்ளிடக்கரை அணைக்கரைக்கு கிழக்கேயும், அணைக்கரைக்கு மேற்கேயும் சில இடங்களில் இப்பொழுது சிகப்பு கப்பி போட்டுக்கொண்டிருக்கிறார்களே, அது கரையைப் பலப்படுத்தவா அல்லது பஸ் போக்குவரத்து அமைக்கவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கரையைப் பலப்படுத்தி நல்ல முறையில் போக்கு வரத்து ஏற்பட முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். பஸ்கள் ஓட்ட முடியுமா என்பதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.